## ஆளும் த.வெ.க. அரசின் தவறுகளைத் திசை திருப்பவே

# கழகத்தின் மீது பழி சுமத்தும் நோக்கில் வழக்கு - பொய் என நிரூபிப்போம்!

### கழகச் சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ பேட்டி!

சென்னை, ஜூலை 3-

ஆளும் த.வெ.க. அரசின் தவறுகளை திசை திருப்பவே கழகத்தின் மீது பழி சுமத்தும் நோக்கில் வழக்கு தொடரப்பட்டுள்ளது என்றும் இதை பொய் என நிரூபிப்போம் என்றும் கழகச் சட்டத்துறைச் செயலாளர் என். ஆர்.இளங்கோ பேட்டியின் போது கூறினார்.

கழகத்தின் மீது பழி சுமத்தும் நோக்கில் வழக்கு தொடர்ந்துள்ள தவெக அரசை கண்டித்து கழக சட்டத் துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ அளித்த பேட்டி வருமாறு :

குதிரை பேரம் மூலம் அ.தி.மு.க. எம்.எல்.ஏ களை ராஜினாமா செய்ய வைத்து சட்டமன்றத்திலேயே த.வெ.க. கட்சியில் இணைக்கின்றனர். அதுபற்றி எல்லாம் லஞ்ச ஒழிப்பு துறை, காவல்துறை விசாரிக்கவில்லையே ஏன்?

த.வெ.க. அரசின் மீதான அதிருப்தி, அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுகளை மறைத்து திசை திருப்பவே வழக்குப் பதிவு செய்துள்ளனர். இதை பொய் என நாங்கள் நிரூபிப்போம்.

லஞ்ச ஒழிப்பு துறை விசாரிக்க வேண்டிய புகாரை வழிமுறைகளை மாற்றி காவல்துறை விசாரிக்க வேண்டிய அவசியம் என்ன? அரசியல் காரணங்களுக்காக தொடரப்பட்ட வழக்கை சட்டப்படி எதிர் கொண்டு முறியடிப்போம்.

த.வெ.க. கட்சியை சார்ந்த எம்.எல்.ஏ ஒருவர், சட்டப்பேரவைத் தலைவர் தேர்வின் போது மாற்றி வாக்களித்தால் ரூ. 35 கோடி தருவதாக ஒருவர் பேரம் பேசினார் என்றும், மிரட்டினார் என்றும் கடந்த 29 ஆம் தேதி புகார் அளிக்கப்பட்டு, அதன் மீது வழக்கு பதிவு செய்து 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கரூரை சேர்ந்த கார்த்திக் மற்றும் அவரது நண்பரையும் கைது செய்துள்ளனர். ஆனால் எங்கு வைத்துள்ளனர் என இதுவரை தெரியவில்லை.

#### லஞ்ச ஒழிப்பு துறைதான் விசாரிக்க வேண்டும்!

இந்த நேரத்தில் நீதிமன்றத்தில் மூன்று முக்கிய வாதங்களை நாங்கள் முன்வைத்தோம். அதில், லஞ்ச ஒழிப்பு துறை தனி அமைப்பாக செயல்பட்டு வரும் போது அது தொடர்



பான புகார்களை லஞ்ச ஒழிப்பு துறைதான் விசாரிக்க வேண்டும். அப்படி அவர்கள் விசாரிக்க வேண்டிய ஒரு புகாரை வேறு காவல் பிரிவு விசாரிக்க வேண்டும் என்றால் அதற்கு அரசாங்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

முன்னாள் முதல்வர் அம்மையார் ஜெயலலிதா அவர்கள் மீதான மூன்று லஞ்ச ஒழிப்பு துறை வழக்குகளை CBCID விசாரணை நடத்த தனிபட்ட அரசு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால் இந்த வழக்கில் சென்னை கமிஷனரிடம் புகார் அளிக்கப்பட்டு அந்த புகார் D5 திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் பதியப்பட்டு உள்ளது. வழக்கு பதிவு செய்யும் போதே அது லஞ்ச ஒழிப்பு வழக்கு என காவல் துறையை சார்ந்த ஆணையர், துணை ஆணையர், ஆய்வாளர் என அனைவருக்கும் தெரிந்துள்ளது.

அப்படி இருந்தும் ஏன் இந்தப் புகாரை லஞ்ச ஒழிப்பு துறைக்கு அனுப்பவில்லை என்றால் லஞ்ச ஒழிப்பு துறைக்கு ஒரு புகார் சென்று அதை விசாரிக்கவேண்டும் என்றால் அதற்கு முறையான நடைமுறைகள் உள்ளன. அந்த நடைமுறைகளை பின்பற்றாமல் தவிர்க்க திருவல்லிக்கேணி காவல் நிலையம் மூலம் புகார் பெறப்பட்டுள்ளது.

#### ஆவணத்தில் முரண்பாடு!

அப்போது நாங்கள் நீதிமன்றத்தில் வைத்த வாதம், உச்ச நீதிமன்றம் வழிகாட்டல் படி குற்றம் சுமத்தபட்டவர்களுக்கு இரண்டு அடிப்படை உரிமைகள் உள்ளன. ஒன்று 7 வருடங்களுக்கு குறைவாக தண்டனை பெற கூடிய குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு கைது செய்யும் முன் கட்டாயமாக நோட்டீஸ் அனுப்பி விசாரணைக்கு அழைக்க வேண்டும். அவர் விசாரணைக்கு ஒத்துழைக்காத பட்சத்தில்தான் கைது செய்து விசாரிக்க வேண்டும். இரண்டாவது கைது செய்யப்பட்டதற்கான காரணங்களை எழுத்து மூலமாக தர வேண்டும்.

இந்த இரண்டையும் செய்தது போல ஒரு ஆவணத்தை தாக்கல் செய்தனர். நீதிமன்றம் கேட்ட போது 30 ஆம் தேதி ஆஜராக நோட்டீஸ் கொடுத்தோம் என்றனர். ஆனால் அவர்கள் கொடுத்த ஆவணத்தில் 29 ஆம் தேதியே நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளதாக இருந்தது. ஆனால் முதல் தகவல் அறிக்கை தயாரிக்கப்பட்டதே 30 ஆம் தேதிதான். 30 ஆம் தேதி பதிந்த வழக்கிற்கு 29 ஆம் தேதி எப்படி நோட்டீஸ் கொடுத்தீர்கள் என நீதிமன்றம் கேள்வி கேட்டது. அதற்கு காவல்துறை தரப்பில் சரிவர பதில் அளிக்கப்படவில்லை.

#### ஏன் காவல்துறை நடவடிக்கை எடுக்கவில்லை?

இப்போது எம்.எல்.ஏ.க்கு பணம் கொடுக்க முயற்சித்ததாக கூறி இவ்வளவு விரைவாக செயல்படும் காவல் துறை, அ.தி.மு.க. எம்.எல்.ஏ.கள் தங்கள் எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு சட்டமன்றத்திலேயே த.வெ.க. கட்சியில் இணைகிறார்களே அதை பார்த்தும் காவல்துறையும், லஞ்ச ஒழிப்பு துறையும் ஏன் அமைதியாக இருக்கிறது. ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற வாதத்தையும் நீதிபதி முன்பு வைத்துள்ளோம்.

அ.தி.மு.க. எம்.எல்.ஏ.கள் எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க.வில் இணைவதற்கு பின்னால் குதிரை பேரம் நடந்துள்ளது. த.வெ.க. செய்யும் குதிரை பேரத்தை ம.தி.மு.க. தலைவர் வைகோ அவர்களே வெளிப்படையாக கூறி உள்ளார். குற்றத்தை தடுக்கும் லஞ்ச ஒழிப்பு துறை ஏன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என எங்களது வாதங்களை வைத்துள்ளோம்.

#### பொய் என நிரூபிப்போம்!

மேலும் இனிவரும் நாட்களிலும் இதனை முன் வைப்போம். எங்களின் கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி அவர்கள் ஆளுநருக்கும், லஞ்ச ஒழிப்புத் துறைக்கும் இதுபற்றி ஏற்கனவே கடிதம் எழுதி உள்ளார்.

இந்த ஆளும் அரசின் மீது மக்கள் வைத்துவரும் பல்வேறு குற்றச்சாட்டுகள், அரசின் தவறுகள், இயலாமை, அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுகளை மறைத்து திசை திருப்ப இதுபோன்ற வழக்குகளை பதிவு செய்கிறது இந்த அரசு.

இந்த வழக்கு என்பது அரசியல் காரணங்களுக்காக போடப்பட்ட வழக்கு. இதை பொய் என நாங்கள் நிரூபிப்போம்.

இவ்வாறு என்.ஆர்.இளங்கோ பேட்டியளித்தார்.

---

## முதல்வர் வசம் உள்ள நகராட்சி நிர்வாகத் துறையில்

# நிதி பற்றாக்குறையால் சென்னையில் வளர்ச்சிப் பணிகள் முடக்கம்!

### மாநகராட்சி ஊழியர்கள், ஒப்பந்ததாரர்கள் பாதிப்பு!

சென்னை,ஜூலை,3-

தமிழகத்தின் தலைநகரான சென்னையின் உள்கட்டமைப்பு மற்றும் அன்றாட நிர்வாகத்தைத் தாங்கி நிற்கும் சென்னை மாநகராட்சி, தற்போது கடும் நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. கடந்த ஆட்சிக் காலத்தில் முடிக்கப்பட்ட பணிகளுக்கான நிலுவைத் தொகை ரூ.2000 கோடியை தாண்டிய நிலையில், தற்போது ஒட்டுமொத்த நிலுவைத் தொகை ரூ.4,000 கோடியாக அதிகரித்து, நடப்பு பணிகளையே முடக்கும் அபாயகரமான கட்டத்தை எட்டியுள்ளது.

முதலமைச்சரின் நேரடி கட்டுப்பாட்டில் உள்ள நகராட்சி நிர்வாக துறையின் கீழ் இயங்கும் மாநகராட்சியில் ஏற்பட்டுள்ள இந்த நிதி முடக்கம், தற்போது தவெக ஆட்சியில் முதலமைச்சர் விஜயின் பொறுப்பில் உள்ளது. இந்த நெருக்கடி ஒப்பந்ததாரர்களை மட்டுமல்லாது ஒட்டுமொத்த சென்னை மக்களின் இயல்பு வாழ்க்கையையும் கேள்விக்குறி யாக்கியுள்ளது. கடந்த திமுக ஆட்சிக் காலத்தில், சென்னை முழுவதும் புதிய தார்ச் சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், மேம்பாலங்கள், தெருவிளக்குகள் என பல்வேறு சிறப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

ஆட்சி மாற்றத்திற்கு பிறகு, இந்த பணிகளை செய்து முடித்த 40க்கும் மேற்பட்ட முன்னணி ஒப்பந்ததாரர்களுக்கு வழங்க வேண்டிய சுமார் ரூ.2000 கோடி நிலுவைத் தொகை இதுவரை விடுவிக்கப்படவில்லை. இதனால் ஒப்பந்ததாரர்கள் தொழிலாளர் சம்பளம், மூலப்பொருள் கடன் ஆகியவற்றை அடைக்க முடியாமல் கடுமையான நிதி நெருக்கடிக்கு உள்ளானார்கள். பழைய நிலுவைகள் தீர்க்கப்படாத நிலையில், தற்போது சமர்ப்பிக்கப்பட்ட பில்கள், தயாரிக்கப்பட்டு வரும் பில்கள், நடப்பு பணிகளுக்கான தொகை என மொத்த நிலுவை ரூ.4,000 கோடியை எட்டியுள்ளது.

இது சென்னையின் வளர்ச்சியையே முடக்கும் பேராபத்தாக மாறியுள்ளது. சென்னையின் பல்வேறு வார்டுகளில் தார்ச் சாலை, உட்புற சாலை சீரமைப்பு, மழைநீர் வடிகால் இணைப்பு, பாலங்கள் கட்டும் பணிகள் அரைகுறையாக நடைபெற்று வருகின்றன. கடந்த கால பணிகளுக்கான பணமே வராததால், தற்போதைய பணிகளுக்கு தேவையான சிமெண்ட், கம்பி, தார் போன்ற மூலப்பொருட்களை வாங்க அவர்களிடம் பணப் புழக்கம் இல்லை.

கட்டுமான பணிகளில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கான தினக் கூலி மற்றும் வடமாநில தொழிலாளர்களுக்கு வாராந்திர சம்பளம் வழங்க முடியாத நிலை உள்ளது. கையில் நிதி இல்லாததால், பல இடங்களில் ஒப்பந்ததாரர்கள் பணிகளை பாதியிலேயே நிறுத்தி வைத்துள்ளனர். ஒருபுறம் நடப்பு பணிகளுக்கான காலக்கெடு நெருங்குவதால், மாநகராட்சி அதிகாரிகள் பணிகளை விரைந்து முடிக்கும்படி ஒப்பந்ததாரர்களை வற்புறுத்துகின்றனர்.

மறுபுறம், பழைய பாக்கியை கொடுத்தால்தான் புதிய பணிகளை தொடர முடியும் என்று ஒப்பந்ததாரர்கள் கைவிரிக்கின்றனர். வங்கிகளிலும், தனியாரிடமும் வாங்கிய கடன்களுக்கான வட்டி நாளுக்கு நாள் உயர்ந்து வருவதால், பல ஒப்பந்த நிறுவனங்கள் திவாலாகும் நிலையில் உள்ளன. குறிப்பாக சென்னையின் பல வார்டுகளில் மழைநீர் வடிகால் மற்றும் சாலை பணிகளுக்காக தோண்டப்பட்ட பள்ளங்கள் மூடப்படாமல் அப்படியே கிடக்கின்றன. வடகிழக்குப் பருவமழை நெருங்கும் வேளையில், மழைநீர் வடிகால் பணிகள் பாதியில் நிற்பது பெரும் வெள்ள அபாயத்தை உருவாக்கும்.

அரைகுறையான சாலை பணிகளால் அன்றாட போக்குவரத்து ஸ்தம்பித்து, வாகன ஓட்டிகளும் பொதுமக்களும் கடும் அவதிக்கு உள்ளாகின்றனர். இதுமட்டுமல்லாமல் ரூ.4,000 கோடி பற்றாக்குறையின் தாக்கம் மாநகராட்சியின் தினசரி நிர்வாகத்தையும் அசைத்துப் பார்க்கிறது. மாநகராட்சியின் சொந்த வருவாய் அனைத்தும் பழைய கடன்களை அடைப்பதற்கே சரியாக இருப்பதால், தூய்மைப் பணியாளர்கள், தற்காலிக ஊழியர்கள், அலுவலகப் பணியாளர்களின் மாதாந்திர ஊதியமும் வரும் மாதங்களில் தடையின்றி வழங்கப்படுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

நகராட்சி நிர்வாகத் துறை தற்போது முதலமைச்சர் விஜய்யின் நேரடி பொறுப்பில் உள்ள நிலையில், இந்தப் பிரச்னைக்கு தீர்வு காண்பது அவசர தேவையாக மாறியுள்ளது. முதலமைச்சர் விஜய் உடனடியாக தலையிட்டு, சென்னை மாநகராட்சிக்கு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். மழைக்காலம் நெருங்குவதால், மழைநீர் வடிகால் மற்றும் சாலை பணிகளுக்கான நிலுவை தொகையை முதலில் விடுவிக்க வேண்டும்.

மாநகராட்சியின் வருவாயை பெருக்கவும், செலவினங்களை முறைப்படுத்தவும் நிரந்தரத் தீர்வு காண வேண்டும் எனவும், சென்னை மாநகராட்சி ஊழியர்களுக்கு சரியான நேரத்தில் சம்பளம் கொடுக்க வேண்டுமென மாநகராட்சி அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர். நகராட்சி நிர்வாகத் துறையை வைத்திருக்கும் முதலமைச்சர் விஜய் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அனைத்துத் தரப்பினரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

---

## திருப்பூர் - கோவை தனியார் பேருந்துகளில்

# டிக்கெட் கட்டணம் ரூ.42 ஆக உயர்வு - பயணிகள் அதிர்ச்சி!

*திருப்பூர், ஜூலை, 3-*

*திருப்பூர் கோவை தனியார் பேருந்துகளில் டிக்கெட் கட்டணம் ரூ.35ல் இருந்து ரூ.42 ஆக உயர்த்தப்பட்டுள்ளது பயணிகள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.*

*திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான கடந்த திராவிட மாடல் ஆட்சியில் மக்களின் முன்னேற்றத்தை மட்டுமே கருத்தில் கொண்டு அவர்களின் சுமையை போக்கும் வகையில் மகளிர் இலவச பேருந்து திட்டத்தை செயல்படுத்தியது இதனால் அவர்களால் மாதம் ரூ 1,000 முதல் ரூ.2,000 வரை சேமிக்க முடிந்தது, நம் தமிழகத்தில் ஆட்சி மட்டும் ஏற்பட்டத்தின் விளைவாக பொதுமக்கள் பல இன்னல்களை சந்தித்து வருகின்றனர்.*

*குறிப்பாக திருப்பூரி லிருந்து வெளியூர்களுக்குச் செல்லும் தனியார் பேருந்துகளில் புதிய அரசின் முறையான அறிவிப்பு ஏதுமின்றி, அடுத்தடுத்து தன்னிச்சையாகக் கட்டணம் உயர்த்தப்பட்டு வருவது பொதுமக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.*

*கடந்தசிலதினங்களுக்கு முன்புதான் திருப்பூரி லிருந்து ஈரோடு செல்லும் தனியார் பேருந்து களின் கட்டணம் 35 ரூபாயிலிருந்து 40 ரூபாயாக அதிரடியாக உயர்த்தப்பட்டது. தற்போது, திருப்பூரி லிருந்து கோவை செல்லும் பேருந்துகளிலும் தன்னிச்சையாகக் கட்டணம் உயர்த்தப்பட்டது பயணிகளிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.*

*பின்னலாடை தொழில் நகரமான திருப்பூருக்கு நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் கோவை, ஈரோடு உள்ளிட்ட அண்டை மாவட்டங்களில் இருந்து பேருந்துகள் மூலமாகவே வேலைக்கு வந்து செல்கின்றனர். இவர்களின் தினசரி பயணச் செலவில் பேருந்துக் கட்டணம் முக்கியப் பங்கு வகிக்கிறது.*

*இத்தகைய சூழலில், திருப்பூரிலிருந்து அவிநாசி வழியாக கோவைக்கு செல்ல அரசுப் பேருந்தில் 36 ரூபாய் மட்டுமே வசூலிக்கப்படும் நிலையில், தனியார் பேருந்துகளில் 42 ரூபாய் வசூலிக்கப்படுகிறது. இது குறித்து பயணிகள் நடத்துனர்களிடம் கேள்வி எழுப்பிய போது, திங்கட்கிழமை முதல் புதிய கட்டணம் அமலுக்கு வந்துள்ளதாக பதிலளித்தனர். அரசுத் தரப்பில் அதிகாரப்பூர்வமாக எந்தவொரு கட்டண உயர்வு அறிவிப்பும் வெளியிடப்படாத நிலையில், அடுத்தடுத்து முக்கிய வழித்தடங்களில் தனியார் பேருந்து நிர்வாகங்கள் தங்களாகவே விலையை உயர்த்தியிருப்பது விதிகளுக்கு புறம்பானது என்று பயணிகள் தெரிவிக்கின்றனர். ஏற்கனவே, அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வால் தவித்து வரும் நடுத்தரக் குடும்பங்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இந்தத் தொடர் பயணக் கட்டண உயர்வு பெரும் சுமையாக மாறியுள்ளது.*

*மேலும், திருப்பூர் கோவை இடையேயான அரசுபேருந்து எண்ணிக்கை குறைக்கப்பட்டு தனியார் பேருந்துகளே அதிகம் இயக்கப்படுவதாகவும் சந்தேகம் தெரிவிக்கின்றனர். இந்த தன்னிச்சையான கட்டண உயர்வு போக்குவரத்துத் துறை அமைச்சருக்கும். மாவட்ட அதிகாரிகளுக்கும் தெரிந்தே நடக்கிறதா? அல்லது அதிகாரிகள் இதைக் கண்டு கொள்ளாமல் இருக்கிறார்களா என்ற கேள்வியையும் முன் வைக்கின்றனர்.*

---

## தமிழ்மொழிக்கு அளப்பரிய பல சாதனைகள் புரிந்த

# வா.மு.சேதுராமன் முதலாமாண்டு நினைவேந்தல் - பெருங்கவிக்கோ பேராலயத் திறப்பு விழா!

### முன்னாள் அமைச்சர் ராஜகண்ணப்பன் சிறப்புரை! கே.கே.கதிரவன் எம்.எல்.ஏ. முன்னிலை!

ராமநாதபுரம், ஜூலை 3-


தமிழ் மொழிக்கு அளப்பரிய பல சாதனைகள் புரிந்த வரும் தமிழால் உலகளந்த பெருமகனாருமான பெருங் கவிக்கோ வா.மு.சேதுராமன் பேராலயத் திறப்பு விழா மற்றும் வா.மு.சேதுராமன் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி நாளை (4.7.2026 சனிக்கிழமை) காலை 8.00 மணியளவில், ராமநாதபுரம் மாவட்டம், அபிராமம் உடைகுளம் சாலை, ஆண்டநாயக புரத்தில் நடைபெறுகிறது.

காலை 8 மணி அளவில் புலவர் நாவை. சிவம் குழுவினரின் திருக்குறள் முற்றோதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு பரமக்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.கே.கதிரவன் முன்னிலை வகிக்கிறார்.

முதுகுளத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ராஜ கண்ணப்பன் கலந்து கொண்டு “நான் கண்ட பெருங்கவிக்கோ” நூலினை வெளியிட்டு, கட்டுரை ஆசிரியர்களை கௌரவித்தும் பெருங்கவிக்கோ பேராலயத்தை திறந்து வைத்தும் உரையாற்றுகிறார்.

இதில் இளம் முனைவர் வா.மு.சே.பூங்கொடி, முனைவர் மதியழகன், வா.மு.சே. தமிழ் மணிகண்டன், மகாலட்சுமி, வா.மு.சே.ஆண்ட



வர், முனைவர் விமலா தேவி, தமிழ்மாமணி வா.மு.சே திருவள்ளுவர், பரிமளா ஆகியோர் உரை நிகழ்த்துகின்றனர்.

கவிஞர் வா.மு.சே.கவி அரசன் முத்துமாரி சிறப்பு விருந்தினர்களுக்கு சிறப்பு செய்கிறார்.

இந்நிகழ்ச்சியில் ஆசிரிய மணி மாணிக்கம், மலேசிய பேராசிரியர் இ.கி.இராமசாமி, பெரியார் நெறியாளர் வரதராசன், மீனாட்சி சுந்தரம் இலக்குமி, நா.குழந்தை, செந்தில், கேலக்சி எம்.பாலா, பேராசிரியர் கபிலன், போத்தி, ஆசிரியர் மூக்கன் ஆகியோர் வீர வணக்க உரை நிகழ்த்துகின்றனர்.

கவிச்சிங்கம் முனைவர் கண்மதியன் தலைமையில் ஆனந்தராசு முன்னிலை யில் பழ தமிழாளன், கவிஞர் கடவூர் மணிமாறன், கவிஞர் கிருட்டிணமூர்த்தி, கவிஞர் மதியரசு, கவிஞர் குறளடியான், மதுரகவி மறத்தமிழன், இசைப் பாவலர் நா.நந்தன், கவிஞர் தில்லை பாஸ்கர், கவி பாரதி அசோக் ராஜ், இலக்கிய மாமணி மரிய விசுவாசம், ஆசிரியர் மாரிமுத்து, கவிஞர் இளைய கோபால் ஆகியோர் கவி பாடுகின்றனர்.

புலவர் நெடுஞ்சேரலாதன் தலைமையில் மார்சல் முருகன், வழக்கறிஞர் சிவகுமார், புலவர் மா.கோபால கிரிட்டிணன், தொமுச வ.இளங்கோ, கவிஞர் முயற்சி முருகேசன், கவிஞர் மோ.அன்பழகன், டாக்டர். கீதா குமரி, தன்சிங் பாதுஷா, கவிஞர் திருவை பாபு, செகன்னாதன், ராமகிருட்டிணன் ஆகியோர் பங்கு பெறும் கருத்தரங்கம் நடைபெறுகிறது.

அறிவன், அன்பன், புவி அரசன், யாழினி, தமிழ் நடை பாவை, கவின், சேதுச் செல்வி, அருளன், இனியா சேது, தமிழ் அறிமாா்க், நிலா கோகுல், தமிழ்க்கீரன் பெருங் கவிக்கோ ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.

நிறைவாக பால்.கோபிநாதன், செந்தூர் பாண்டி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

---

## நாகப்பட்டினம் வி. செல்வராஜ் எம்.பி.யின் தந்தை

# வைத்திலிங்கம் மறைவு!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூலை.3-

நாகை வி.செல்வராஜ் எம்.பி.யின் தந்தை வைத்தியலிங்கம் அவர்கள் மறைந்த செய்தியறிந்து, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:

நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் வி. செல்வராஜ் அவர்களின் தந்தையார் திரு. வைத்திலிங்கம் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து வேதனையடைந்தேன்.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினர்களுக்கும் தோழர்களுக்கும் எனது ஆறுதலை உரித்தாக்குகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

---



கோவை வடக்கு மாவட்டம், ஆர்.எஸ்.புரம் பகுதி, மாநகராட்சி மேற்கு மண்டலம் 72வது வார்டு அருணாச்சலம் சாலையில் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள குழந்தைகள் நல மையத்தை மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி திறந்து வைத்தார். இதில் பகுதி கழக செயலாளர் கார்த்திக் செல்வராஜ், மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், துணை மேயர் இரா.வெற்றிச்செல்வன், மாவட்ட பொருளாளர் அப்துல் ரகுமான், மாவட்ட துணை செயலாளர் ஜெயந்தி சக்திவேல், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் ஆ.தமிழ்மறை, மேற்கு மண்டலகுழுத் தலைவர் தெய்வானை தமிழ்மறை, வட்டக் கழக செயலாளர்கள் ஏ.சுலைமான், பி.ஜெகதீஷ், சண்முகசுந்தரம், நாசர், நௌஷாத், இளைஞர் அணி ஆல்வின், மகேஷ், நரசிபுரம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் என்.ஆர்.கார்த்திகேயன், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் ஏ.எம்.உசேன், ஏ.கே.வேலுச்சாமி, தென்னை சிவா உள்பட பலர் கலந்து கொண்டனர்.